Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 24 (08 - 08 - 1992) சனிக்கிழமை ஓசை 172

## போட்டிப்பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் வந்தன

கிராமசேவை உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் நேற்றுயாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன இம் மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள இப்பரீட்சைக்குத் தோற்ற பரீட்சார்த்திகள் தங்களிடம் ஏற்கனவே இருக்கின்ற அனுமதி அட்டைகளைப் பயன்படுத்தலாமென யாழ் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. இதேவேளை இம்மாதம் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் 5 ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் இம்மாதம் 16 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பட்டதாரி ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான பரீட்சைக்கான வினாத்தாள்கள், இம்மாதம் 26 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஆங்கில உதவி ஆசி (4 ஆம் பக்கம் பார்க்க)

# காரைநகரில் துருப்புக்கள் குவிப்பு

# யாழ். படையெடுப்பிற்கு தயாரிப்பு?

## கடற்படை நடமாட்டம் அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண குடாநாடு மீது பெருந் தாக்குதலை நடத்தும் நோக்கத்துடன் சிறிலங்கா ஆயுதப்படைகள் ஆயத்தங்களை செய்துவருவதாக நம்பகமான தகவல்களிலிருந்து தெரிய வருகிறது. இந்த தயாரிப்பு வேலைகளின் ஒரு அம்சமாக காரைநகர் கடற்படைத் தளத்தில் துருப்புக்களும் ஆயுத தளபாடங்களும் இறக்கப்படுவதாக அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

காரைநகர் கடற்படைத் தளத்தில் மேற்கொள்ளப்படும் இப்படை குவிப்பானது காங்கேசன்துறையில் இருந்து கடல் மார்க்கமாக மேற்கொள்ளப் படுவதாகத்தெரியவருகின்றது இதேவேளை குடாநாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கடற்படை ரோந்து நடவடிக்கை அதிகரிப்பைச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்தன

இதேவேளை வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தொடராக விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் தாக்குதலினால் பெரும் பின்னடைவைச் சந்தித்துவரும் ராணுவம்வடக்கில் மேற்கொள்ளவிருக்கும் தாக்குதல் நடவடிக்கைகளை திசை திருப்புவதற்கே புலிகள் இத்தாக்குதல்களை நடத்துவதாகவும் கூறிவருகின்றது இந்நிலையில்குடாநாட்டினுள் ஒரு தாக்குதலை நடத்துவதன்மூலம் இராணுவத்தினருக்குத் தென் பூட்டவும் புலிகளின் கவனத்தைத் திசை திருப்பவும் முற்படலாம் என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றார்கள்.

## தொண்டமானுடன் இரகசியமாக அரசாங்கம் பேசவில்லை

**- டி. பி. விஜயதுங்கா**

அமைச்சர் தொண்டமானுக்கும், அரசுக்கும் இடையில் பிரஜாவுரிமை விவகாரம் தொடர்பாக எந்தப் பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை என்று சிறிலங்கா பிரதமர்டி.பி.விஜயதுங்காநேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் 1964 ஆம் ஆண்டின்சிறிமாவோ -சாஸ்த்திரி ஒப்பந்தத்தின் கீழ் 84,000 மலையக தமிழ் மக்களைத் திருப்பி இந்தியாவிற்கு அனுப்புவது தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த 84,000 பேருக்கும் பிரஜாவுரிமை வழங்குவது தொடர்பாக அமைச்சர் தொண்டமானுடன் அல்லது வேறெந்த ஒருவரிடமும் எந்தவித பேச்சுக்களும் இடம் பெறவில்லை என்றும் தெரிவித்தார்.

## வினாத்தாள்கள் முழுவதும் வந்தன

நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த (உ/தர) பரீட்சைக்கான இரண்டாம் தொகுதி வினாத்தாள்கள் முழுவதும் நேற்று பலாலி விமான நிலையத்தில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளது.

இப்பரீட்சை திட்டமிட்டபடி இம் மாதம் 25ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் என கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. (பா)

## சிறிலங்கா அரசு விமானங்கள் கொள்வனவு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் உபயோகிக்கவென நான்கு வகையான விமானங்களை கொள்வனவுசெய்ய சிறிலங்கா அரசு தயாராகி வருகிறது. இந்த விமானங்கள் தேபோ சக்தியில் இயங்குபவையாக இருக்கும் என தெரியவருகிறது. இவை ஐரோப்பிய அல்லது லத்தீன் அமெரிக்க தயாரிப்பாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிலங்கா விமானப்படையினரின் வற்புறுத்தல்களை அடுத்தே இந்த விமானங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

## மனைப் பொருளியல் செய்முறைப் பரீட்சை

### 19 முதல் 22 ஆம் திகதிவரை

(யாழ்ப்பாணம்)

1991 ஆம் ஆண்டிற்கான க. பொ. த. (உயர்தர) விசேட பரீட்சையின் மனைப் பொருளியல் செய்முறைப் பரீட்சை இம்மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதிவரை நடைபெறும் என யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பரீட்சை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளது எனவும் யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (பா)

## உலகவங்கி நிபந்தனையால் அரசாங்கம் திணறுகிறது

**பாராளுமன்றத்தில் சுதந்திரக்கட்சி எம்.பி**

(கொழும்பு)

இன்று சிறிலங்கா உலகவங்கியிடம் வாங்கும் கடன்களுக்கு உலக வங்கி நிபந்தனைகளை கடுமையாக்கியுள்ளது.

100 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வாங்குவதற்கு டீசல் விலையை மறுசீரமைக்க வேண்டும் கோதுமைமா விலையை அதிகரிக்க வேண்டும் என நிபந்தனைகளை விதித்து வருகின்றது. இந்நிலையில் அரசு என்ன செய்வது என்று தெரியாமல் தத்தளிக்கின்றது,

இவ்வாறு கடந்த புதன் கிழமை மொத்த விற்பனை வரிச்சட்ட விவாதத்தினை ஆரம்பித்து வைத்துப்பேசிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்தார்.

இங்கு வரிசெலுத்தாமல் ஏமாற்றுவோர் தொகை அதிகரித்துள்ளது. இன்று பொருள்களின் விலைகள் உயர்ந்த வண்ணமே உள்ளது பாவனையாளர்களும் பொருள்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்குகின்றனர். இதேவேளை டீசல் விலைகளை மறுசீரமைக்கும்படி உலகவங்கி கட்டளை பிறப்பித்துள்ளது.

## பிள்ளை பிடிக்கும்

## வதந்தி பரப்புவோர் மீது

## 'குமாரி' மீண்டும் சேவையில்

டாரங்கள் மேலும் தெரிவித்தன. (பா)

கோதுமை மாவிலையை அதிகரிக்க வேண்டும் என நிபந்த

தர்மசிறி சேனநாயக்க தெரிவித்தார்.

மைக்கும்படி உலகவங்கி கட்டளை பிறப்பித்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வதந்தி பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பில் அண்மைக்காலமாகப் பிள்ளைகளைப் புதையல்கள் எடுப்பதற்காகக் கடத்திச் செல்லப்படுவதாக பரப்பப்பட்ட வதந்திகளை அடுத்து பெற்றோர் மத்தியில் அச்சம் நிலவுகின்றது.

அரசாங்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் முகமாக இவ் வதந்திகள் பரப்பப்பட்டுவருவதாகவும் இவ்வதந்திகளைப் பரப்பும் கோஷ்டியினர் பொது மக்கள் கூடும் இடங்களில் அதிகமாக நடமாடுவதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இவ்வதந்திகளைப் பரப்புவோர் மீது அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் கைது செய்து விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸ்மா அதிபர் நாடுமுழுவதிலுமுள்ள பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## சேவையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை ஏற்றும் பணியில் குமாரி கப்பல் மீண்டும் ஈடுபடட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக்கப்பல் கொழும்பில் இருந்து அத்தியாவசியப் பொருள்களுடன் எதிர்வரும் 16-ம் அல்லது 17-ம் திகதிகளில் பருத்தித்துறையை வந்தடையும் எனஎதிர்பார்க்கப்படுகின்றது.

# எதிர்க்கட்சி தொண்டர்கள் மீது யு. என். பி. குண்டர்கள் தாக்கு

## வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் காயம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பதவி விலகக் கோரும் மனு ஒன்றில் ஐக்கிய ஜனநாயக தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத்முதலி தலைமையில் பொதுமக்களின் கையெழுத்துக்களைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்த எதிர்க்கட்சிகளின் ஆதரவாளர்களும், செய்தி சேகரிக்கக் கூடியிருந்த உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளரும் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் நேற்று அடித்துக் காயப்படுத்தப்பட்டனர்.

கைத்துப்பாக்கிகள், இரும்புச் சலாகைகள், கத்திகள் சகிதம் வந்த இந்தக் கும்பல் திடீரென்று புகையிரத நிலையத்துக்குள் நுழைந்து பத்திரிகையாளரைத் தாக்கினர். செய்திப் படப்பிடிப்பாளரின் கமராக்களையும் பறித்துச் சேதப் படுத்தியதாகப் பத்திரிகையாளர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது இந்தத் தாக்குதல் சம்பவத்தில் படப்பிடிப்பாளர் மூன்று பேர் காயமடைந்தனர்

இந்தக் கொலைக் கும்பல் சந்தேகமின்றி ஜனாதிபதி பிரேமதாசா அவர்களின் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்வர்களே என்று அத்துலத்முதலி கூறியுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றித் தாம் விசாரணை மேற்கொண்டு வருவதாகப் பொலிசார் கூறுகின்றனர்.

# கொழும்பில் இரவிரவாக தமிழ் இளைஞர்கள் வேட்டை

## 200க்கு மேற்பட்டோர் கைது

(கொழும்பு)

கடந்த சில தினங்களாக கொழும்பைச் சுற்றியுள்ள நகர்ப்பகுதிகளில் சிறிலங்கா பொலிசாரின் திடீர் தேடுதல் நடவடிக்கைகளினால் 200 க்கு மேற்பட்ட தமிழ்இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் சிலர் கொழும்பில் ஊடுருவி இருப்பதாக காரணம் கூறி காலி வீதியினை அண்டியுள்ள கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை,தெஹிவளை, கல்கிசை ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ இளைஞர், யுவதிகள் இரவோடிரவாக கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அடையாள அட்டை இல்லாதோர் கொழும்பில் தகுந்த காரணமின்றி தங்குவோர் பொலிஸில் தம் பெயர்களை பதிவு செய்து கொள்ளாதோர் என பலதரப்பட்ட வகையினர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய் மட்டும் தெமட்டக்கொடையில் 49 தமிழ் இளைஞர்களும் கொழும்பு கோட்டைப் பகுதியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய பத்திரிகையாளர் வடக்கே வரத் தடை

(கொழும்பு)

வடபகுதி நோக்கி வந்த இரண்டு கனேடிய பத்திரிகையாளர்களை வவுனியாவில் வைத்து சிறிலங்கா படையினர் திருப்பி அனுப்பியுள்ளனர் எனத் தெரிவிககப்படுகிறது.

கடந்த 3 ஆம் திகதியே இவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட இருந்த சமயம் படையதிகாரிகள் சில போலியான காரணங்களை காட்டி திருப்பியனுப்பியுள்ளனர்.

இப்பத்திரிகையாளர் இருவரும் கடந்த வருடம் யாழ்ப்பாணம் வந்து பல செய்திகளைத்திரட்டி கனேடிய பத்திரிகைகளில் வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கது.

திரு.குவாள், திரு டியோன் ஆகிய இருவருமே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் ஆவர். (05)

## சுயவிருப்பத்தில் வரவில்லை அகதிகள் தெரிவிப்பு

(திருக்கோணமலை)

இந்தியாவிலிருந்து கடந்த திங்கட்கிழமை விமானமூலம் திருக்கோணமலைக்குகொண்டு வந்து இறக்கப்பட்ட தமிழ் அகதிகள் சுயவிருப்பத்தின் பேரில் தாம் இலங்கைக்கு வரவில்லை எனவும், பலவந்தமாகவே இங்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் செய்தியாளர்களிடம் கூறியுள்ளனர்.

இன்றைய யுத்த சூழ்நிலையில் தாம் இலங்கை திரும்ப விரும்பியிருக்கவில்லை எனவும் தங்களால் இலங்கை செல்ல முடியாது என தமிழ் நாட்டிலுள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் கூறியபோது தமது கோரிக்கைக்குப் பதிலாக தம் மீது பொலிசார் தாக்குதல் நடத்தியதாகவும் வவுனியாவைச் சேர்ந்த தமிழ் அகதியொருவர் தெரிவித்தார்.

தாம் வேண்டாதவர்களாக இந்திய அரசால் நடத்தப்பட்டதாகவும் ஏன் கடல் கட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கரடியனாறில் சுற்றிவளைப்பு 26 விவசாயிகள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர்பாரிய சுற்றிவளைபபு ஒன்றை நடத்தினர். சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இச்சுற்றிவளைப்பின்போது வயலில் வேலை செய்து கொண்டிருந்த 26 தமிழ் விவசாயிகளை சிறிலங்கா இராணுவத்தினர் பிடித்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு பிடித்துச் செல்லப்பட்டவர்களில் இருவர் சிறு காயங்களுடன் தப்பிவந்தனர். சிறிலங்கா இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்ட ஏனையோரின் நிலை குறித்து எதுவும் தெரியவரவில்லை.

செல்வராசா சந்தக்குட்டி, சீனித்தம்பி புண்ணியமூர்த்தி, தர்மலிங்கம் சிவா, நல்லதம்பி புவனேந்திரன், காளிமுத்து சாந்தன், சிவலிங்கம் உதயராஜ், சின்னத்துரை அழகுதுரை, அரசரத்தினம் ஆனந்தன், ஞானசேகரம் இன்பராசா, செல்லத்தம்பி ஜீவா, வயிரமுத்து தங்கவேல், மரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் தாயகம் திரும்புவது தாமதமாகலாம்

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திருப்பி அனுப்பப்படுவது மேலும் தாமதமாகலாம்எனத் தெரியவருகிறது. தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகள் தாயகம் திரும்ப விரும்பாமையும், ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயப் பிரதிநிதிகளின் பிரசன்னத்தை அவர்கள் பயன்படுத்த முயல்வதாலும் இத் தாமதம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வன நாடே வளநாடு**
**அது நிலைக்க வழிகோலு**


‘கூவு குயிலே’

யாழ். இந்துக் கல்லூரியில் இன்று மாலை 5 மணிக்கு

**இசை நாடா வெளியீடும்**
**இசை நிகழ்ச்சியும்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிதர்சனம்,
தமிழீழம்.

(சி/4846)

# வரி விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை தேவை. தொடர்பு - ''மில்க்வைற்'' யாழ்ப்பாணம். (சி/4844)

### வாங்கலாம் விற்கலாம்

பாவித்த தரமான கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும் உங்கள் மணிக்கூடுகள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும் சகல மணிக்கூடுகளது பற்றறிகளும் பெற்றுக்கொள்ளலாம். சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம். டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். (2985)

### கோவை மகேசனின் நினைவஞ்சலிக் கூட்டம்

சுதந்திரன் பத்திரிகை ஆசிரியரான கோவை மகேசனின் நினைவை ஒட்டிய நினைவஞ்சலிக்கூட்டம்யாழ் நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் நாளை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற உள்ளது.

அரசினர் ஆயுர்வேத போதனா வைத்திய சாலை,
கைதடி,
6-8-1992.

### அரசாங்க அறிவித்தல்

கைதடி, அரசினர் ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில், ஆயுர்வேத விசேட வைத்திய நிபுணர்களுக்கான மூன்று வெற்றிடங்களை நிரப்புவதற்காக, கீழே கொடுக்கப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆயுர்வேத விசேட வைத்திய நிபுணர்களிடமிருந்து விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன

(1) வயதெல்லை60வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

(2) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(3) பதிவு பெற்ற வைத்தியராக இருத்தல் வேண்டும்.

(4) முறிவு, விஷக்கடி,

யாழ். செவிப்புலனற்றோர் / புனர்வாழ்வு நிலையம் நடாத்தும்

## விளையாட்டுப் போட்டி

(1) துடுப்பாட்டம் 11 பேர் 20 ஓவர்.
(2) உதைபந்தாட்டம் 11 பேர் 45 நிமிடம்.
(3) உதைபந்தாட்டம் 7 பேர் 30 நிமிடம்.
(4) வலைபந்தாட்டம் 7 பேர் 30 நிமிடம்.

பதிவுக் கட்டணம் ரூபா 50/=

விண்ணப்ப முடிவு திகதி:- 26. 08. 1992

போட்டிக் காலம்:- செப்டெம்பர் 1ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையும்

1) யாழ்குடா, வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி-:
யா செவிப்புலனற்றோர்
கைத்தொழில் பேட்டை
153, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(2) வடமராட்சியைச் சேர்ந்தவர்கள்:-
சே. செல்வராஜா
குகன் ஸ்ரூடியோ
பருத்தித்துறை

ஆகிய முகவரிகட்கு விண்ணப்பிக்கவும். இறுதிப் போட்டியில் வெற்றி பெறுபவர்கட்கு மாத்திரம் பரிசுகள் வழங்கப்படும்.

ஏனைய விபரங்கட்கு எம்முடன்தொடர்புகொள்ளவும்.
(2977)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 8 08- 197

தாயக மண்ணில் 9-07-1992

### லெப்டினன்ட் சந்திரபவான்

(அலோசியஸ்)


(சுந்தரலிங்கம் மோகனதாஸ்
நவரத்தினத்தின் பேரன்)

தமிழீழ அன்னையை சிறை மீட்க
தலைவன் வழியில் ஆயுதம் ஏந்தினாயே!
அதிரடிகள் பல கொடுத்த சிறப்பு படையில்
அதிவீரனாய் நின்றாயே அலோசியஸ்
இயக்கச்சியில் நேரடி மோதலில்
வீர சுவர்க்கம் அடைந்தாயே!
வீரா உந்தன் குருதிதனில்
ஈழப் பூக்கள் மலர்ந்திடுமே .....

(இவரதும், இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து வேங்கைகளினதும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்).

உன் பிரிவால் வாடும்
அம்மா, அண்ணன்மார்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்: 23 - 05 - 1974

வீரச்சாவு: 22 - 07 - 1991

### வீரவேங்கை வின்சன்

(வேலுப்பிள்ளை சந்திரகுமார்)

திதி: 09. 08. 1992

ஆண்டொன்று சென்றதடா!
ஆறவில்லை எம்மனது
கட்டைக் காட்டினிலே கர்ச்சித்து நின்றவனே!
வேண்டாத அரக்கர் தனை விரட்டிட சென்றவனே
தூண்டாமணி விளக்காய் துயில் கொண்ட பெருவிளக்கே
நாம் வேண்டுவது என்றும் உன் பாங்கான
நினைவுகளை!

09-08-92 நாளைஓராண்டு கிரியை நடைபெற இருப்பதால் சகபோராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
மதவடி,
வடலியடைப்பு.

உன்பிரிவால் துயருறும்
அன்பு அம்மா, அண்ணாமார்
சகோதரி, மைத்துனர், மருமக்கள்

(2971)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம் 05 — 08 — 1975

வீரச்சாவு 09 — 07 — 1992

### லெப்டினன்ட் செழியன்

(சீனா)

(இலட்சுமிகாந்தன் குமணன்)

(09. 07. 92 அன்று வாடியடி இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவினார்)

அழிவ டைந்த கோட்டையிலுந்தன்
அஞ்சி டாதோர் வீரம் கண்டோம்
செழிய னன்று புலிப்படை யிணைந்து
செங் களமாடிய வீரம் கண்டோம்
வழி மறித்து கட்டைக்காடு இயக்கச்சியில்
வல்லவனாய்ப் போரிட்டாய்
பெரும் தலைவன் படை சிறக்க
பெருமகனாய்ப் போரிட்டாய்
போராடு கின்றோம் வாழி யென்றே

## புதிய அரசியல் முன்னணி உருவாகி வருகிறது

(கொழும்பு)
புதிய அரசியல் முன்னணி ஒன்று தற்போது உருவாகிறது. இந்த முன்னணி 'பெரமுன' என்ற பெயரில் செய்திப் பத்திரிகை ஒன்றை வெளியிட உத்தேசித்துள்ளது என நன்கு விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன என்று கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

## நினைவு கூருகின்றோம் ...

## 1992 - 08 - 08

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு பளையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட பாரவண்டி உரிமையாளரான வேம்பொடுகேணியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து மந்திகை மருத்துவமனையில் வீரச்சாவெய்திய -

**வசந்தா** (மஞ்சுளாதேவி அந்தோனிப்பிள்ளை - வண்ணான்குளம், முல்லைத்தீவு)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். மாறன்** (தங்கராசா கிருஸ்ணன் - கச்சாய் வீதி, சாவகச்சேரி)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் விழுபபுண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**நௌசாத்** [நவரட்ணம் பவானந்தா - இளவாலை வடக்கு]

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**குஞ்சன்** [கண்டி]

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 17 தமிழர்கள்

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட ஏறாவூரைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் - சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட ஏறாவூர்-4ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் - நிந்தாவூர் இந்துக்கோவில் இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 27 தமிழர்கள்- கல்லடிப் பாலத்தில் வைத்து கைது செய்யப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்ட புதுநகர் 8-ம் வட்டாரத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞன் - காத்தான்குடியில் முஸ்லிம் குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வாழைச்சேனை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி இடம்பெயர்ந்தோர் முகாம் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட சிறுமி உட்பட 3 தமிழர்கள் - யாழ். புகையிரத நிலையப் பகுதியிலான விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட சிறுவன் மற்றும் பரியோவான் கல்லூரி ஆசிரியர் உட்பட 9 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். வரன்** [கந்தர் தர்மகுலசிங்கம் - சிவன் கோயிலடி. உருத்திரபுரம், கிளிநொச்சி]

**லெப். காந்தி** [கந்தசாமி கிருஸ்ணகுமார் - வன்னிவிளாங்குளம், மாங்குளம், முல்லைத்தீவு]

**2-ம் லெப். விசா** [பிறின்ஸ் ராகல் ராஜன் - 6-ம் கட்டை, பாலையூற்று, சாம்பல்தீவு, திருக்கோணமலை]

**2-ம் லெப் இளங்கதிர்** [ஆறுமுகம் ரகுகுமார் - பாலையூற்று, திருக்கோணமலை]

**2-ம் லெப். அமலதாஸ்** [நடராசா சிறிதரன் -

(4) முறிவு, விஷக்கடி, கண், எரிகாயம் ஆகிய வைத்தியத் துறைகளில் விசேட பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

இந்த நியமனங்கள் தற்காலிகமானதும், ஒரு வருட காலத்திற்கு மட்டும் வழங்கப்படும். தேவையேற்படின் சேவை நீடிக்கப்படும்.

இவர்கள் பகுதி நேர வைத்தியர்களாகவும், முழுநேர வைத்தியர்களாகவும் நியமிக்கப்படுவர் பகுதி நேர வைத்தியர்களாயின் கிழமையில் 4 நாட்கள் வேலை செய்தல் வேண்டும். இவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 2200/-வேதனமாக வழங்கப்படும். முழுநேர வைத்தியர்களாயின் கிழமையில் 6 நாட்கள் வேலை செய்தல் வேண்டும். இவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 2700/- வேதனமாக வழங்கப்படும். வேலை செய்யும் நாட்கள் குறைவாக இருப்பின் அதற்கேற்ப வேதனம் வழங்கப்படும்.

மேலே கொடுக்கப்பட்ட தகைமைகளுடன், தேவையான மற்றும் விபரங்களையும் விண்ணப்பத்தில் சேர்த்து 21-8-1992- ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ ''அரசாங்க அதிபர், செயலகம், யாழ்ப்பாணம்'' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடிதமேல் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஆயுர்வேத விசேட வைத்தியர் நிபுணர்களுக்கான விண்ணப்பம்'' என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

(சி/4843)

உன் பாவால் வாழும்
அம்மா, அண்ணன்மார்
பெரியதாய்மார், அக்கா, தங்கச்சி
உற்றார், உறவினர், நண்பர்கள்.

கொத்தியகாடு,
தொண்டமானாறு.
(2976)

பெருமகனாய்ப் போரிட்டாய்
போராடு கின்றோம் வாழி யென்றே
படை பெருக்கும் பார் அங்கே!
காற்றுமொலியும் கடலும் நாளை
குமணன் செழியன் புகழ் பாடும்

(2941)

தாய், சகோதரங்கள்

## ஆகாய கடல் வெளிப் போரில் ஆகுதியாகிய
## அராலியின் செல்வங்களின் ஓராண்டு நினைவில்
# எங்கள் நினைவலைகள்





வீரவேங்கை
**கோமதி**
(கனகலிங்கம் சுடரொளி)
பூவாக: 10-02·1971
புயலாக: 1-07-1991

வீரவேங்கை
**குயின்சி**
(தர்மராஜா தயாநிதி)
பூவாக: 10-05-1ษ72
புயலாக; 13-07-1991

வீரவேங்கை
**கஜன்மாமா**
(சுந்தரராஜா மகேஸ்வரன்)
பூவாக: 08-08-1962
புயலாக: 18-07-1991

உங்கள் நினைவுகள்
எங்கள் விழிகளில்
நீரை நிறைக்கிறது - எனினும்
உங்கள் கனவுகள்

எங்களை
இலட்சியம் நோக்கி
இழுத்து செல்கிறது

தமிழீழ மாவீரர்
ஞாபகார்த்த நூலகம் அராலி தெற்கு

(2981)

பாலையூற்று, திருக்கோணமலை]

**2-ம் லெப். அமலதாஸ்** [நடராசா சிறிதரன் - அன்புவழிபுரம், திருக்கோணமலை]

**2-ம் லெப். சிவபாலன்** [மருதப்பிள்ளை சத்திய நாதன் - பூந்தோட்டம், வவுனியா]

**2-ம் லெப். வாசு** [கறுப்பையா மாணிக்கம் - பூந்தோட்டம், வவுனியா]

**2-ம் லெப். யசோ** [பஞ்சலிங்கம் ராஜ்குமார் - ஆதி கோயிலடி, வல்வெட்டித்துறை]

**விக்ரர்/விங்ரர்** [இராசரட்ணம் சத்தியபாலன் - புல்மோட்டை, திருக்கோணமலை]

**டிலஸ்** [குழந்தைவேல் ஜெயரட்ணம் - அம்பாள்குளம், கிளிநொச்சி]

**விஜி** [பாலச்சந்திரன் இலங்கேஸ்வரன்-புதுக்குடியிருப்பு, குச்சவெளி, திருக்கோணமலை]

**கவி** [யோகராசா சிவபாலன் - 4ஆம் கட்டை, புல்மோட்டை, திருக்கோணமலை]

**தியாகராஜன்** [முருகையா ராஜ் - பாலையூற்று, திருக்கோணமலை]

**கில்பேட்** [யோண்சிங்கம் செல்வராஜா-5-ம்வாய்க்கால், பன்குளம், திருகோணமலை]

**ஜீவராசா** [சின்னையா நாதன் - தண்ணீரூற்று, புள்ளியவளை, புல்லைத்தீவு]

**ஜோதி** [பாலசிங்கம் ரூபராசா - சிவன்கோயில் வீதி உருத்திரபுரம், கிளிநொச்சி]

**மாக்ஸ்** [பத்மகாந்தன் ராஜ்குமார் - புளியம்பொக்கணைச்சந்தி, பெரியகுளம், கண்டாவளை, பரந்தன், கிளிநொச்சி]

**பில்லா** [வேலாயுதபிள்ளை கருணன் - அம்பலவன் பொககணை, முல்லைத்தீவு]

**செல்வன்** [வேலாயுதம் நாகேஸ்வரன் - தண்டுவான், நெடுங்கேணி, மணலாறு]

**சந்தர்/சுந்தர்** [இந்திரலிங்கம் கிரிதரன் - 162, கடற்கரை வீதி, பருத்தித்துறை]

**பகீர்** [தியாகராசா சுனில் - சிறுவிளான், இளவாலை]

**பதுமநிதி** [சுதாயினி சிறிதரன் - மயிலிட்டித்துறை, மயிலிட்டி]

**ஆனந்தன்** [தங்கரத்தினம் ரவிச்சந்திரன் - ஆனந்தன் வீதி, மூத்தவினாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை]

மண்டைதீவுப்பகுதியில், முன்னைய ஆண்டில், சிறிலங்கா இராணுவத்தினரால் மூடப்பட்ட கிணறு ஒன்றிலிருந்து எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்ட 16 தமிழர்கள்
மண்டைதீவு கிழக்கு அம்மன் கோயிலுக்கு முன்பாகவுள்ள கிணற்றிலிருந்து - மண்டை ஓடுகள், மற்றும் சில எலும்புகளாய் மட்டும் மீட்கப்பட்ட 8 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4842]

சிந்தனைக்கு

மனமுண்டானால் இடமுண்டு.
— தமிழ் முதுமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08- 08- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## நொண்டிச்சாட்டு

"உலகிலேயே சிறந்த அரசியல் சட்ட அமைப்பு இலங்கையிலேயேதான் உண்டு. தமிழ்மொழி அமுலாக்கல் சட்டமும் உண்டு. தொழிற்சங்க சட்டங்கள் சிறப்பானவை. ஆனால் இச்சட்டங்கள் அமுல்படுத்துவதிலேயே பிரச்சினைகள் இருக்கின்றன" இவ்வாறு கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

இப்பேச்சின் மூலம் அமைச்சர் செல்லச்சாமி சிறிலங்காவின் அரசியல் சட்டத்திற்குப் புகழாரம் சூட்ட எண்ணினாரா? அல்லது சட்டங்கள்யாவும் அமுல் செய்யப்பட வில்லை என்பதைச் சுட்டிக் காட்ட முற்பட்டாரா? இதில் எது என்பதை தெளிவாகக் கூற முடிய வில்லை. ஆனால், அமைச்சர் எதைக்குறிப்பிட்டாலும் பரவாய் இல்லை. நமக்கு எழும் கேள்வி அமுலாக்கப்படாத சட்டங்கள் ஏன் இயற்றப்படவேண்டும் என்பதே ஆகும்.

இலங்கையில் இனப்பிரச்சினை தீவிரமாவதற்கு முக்கிய காரணிகள் ஒன்றாக இருந்தது சிங்கள அரசாங்கங்கள் கடைப்பிடித்த மொழிக் கொள்கையாகும். 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்ட போதே இது குறித்துப் பலமான எச்சரிக்கை செய்யப்பட்டது. ஆனால், அதனை சிங்கள ஆட்சியாளர் கருத்திற்கொள்ள வில்லை. இதனோடு இணைந்து விரிவடைந்த தமிழர் தேசிய இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக முனைப்படைந்த வேளையில், 1977 இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். அரசாங்கம் தமிழுக்கு தேசியமொழி அந்தஸ்து வழங்கும் சட்டத்தை நிறைவேற்றியது.

ஆனால், சுமார் பதினைந்து வருடகால ஆட்சியின் பின்னரும் தமிழ்மொழி அமுலாக்கல் சீராக இடம்பெறவில்லை. மாறாக, அரசதிணைக்களங்களில் தமிழ்மொழி கொலை செய்யப்படுகிறது. பாராளுமன்றத்திலும் வெளியிலும் இது குறித்து தொடர்ந்தும் பேசப்பட்டு வருகிறது. சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவும் இது குறித்துப் பேசியுள்ளார். கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஐ.தே.க. பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் 'தமிழ் மொழி அமுலாக்கலில் அரசஅதிகாரிகள் கூடுதல் அக்கறை காட்டவேண்டும், எனக்குறிப்பிட்டுள்ளார்.

# அரசியலில் ஈடுபடுவதற்கு சோனியா காந்தி முடிவு?

[டில்லி]

கட்சி அரசியலில் ஈடுபடுவதில்லை என்ற முடிவை உதறித் தள்ளிவிட திருமதி சோனியா திட்டமிட்டு வருவதாக புதுடில்லியில் பரவலாக நம்பப்படுகிறது.

சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் டில்லி திரும்பிய திருமதி சோனியா காந்தி பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதாகவும், ராஜீவ் மரணத்தின் பின்னர் பொது மக்களின் பார்வையில் படுவதை தவிர்த்து வந்த திருமதி காந்தி இப்போது பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது காங்கிரஸ்காரர்களுக்கு அதிர்ச்சியாக இருப்பதாகவும் தெரியவருகின்றது.

திருமதி சோனியா காந்தியை அவரது இல்லத்திற்குச் சென்று சந்திக்கும் மக்களின் தொகை பெருகி வருவதாகவும். அரசியல் நோக்கம் கொண்ட பலர் திருமதி காந்தியைச் சந்தித்து 'சுகம்' விசாரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. திருமதி காந்தியைத் தினசரி சென்று சந்திப்பவர்களில் காங்கிரஸ் அமைச்சர்கள் மற்றும் கட்சியின் முக்கிய தலைவர்கள் சிலரும் இடம்பெறுகின்றனராம்.

இதேவேளை திருமதி காந்தி தனக்கென பிரத்தியேகமான தகவல் பிரிவொன்றை உருவாக்கி அதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டு நிலவரங்களை அவதானித்து வருவதாகவும், ஜவாகர் பவனில் பொது மக்களையும், கட்சித் தொண்டர்களையும் சந்திக்க தனி அலுவலகம் ஒன்றையும் திறக்க திருமதி காந்தி திட்டமிடுவதாகவும் தெரிய வருகின்றது.

இந்திய குடியரசுத் தலைவராக டாக்டர் சங்கர் தயாள் சர்மா பதவியேற்ற வைபவத்தில் திருமதி சோனியாகாந்தி கலந்துகொண்டார் என்பதும், இந்நிகழ்ச்சி தொலைக்காட்சியில் நேரடி அஞ்சல் செய்யப்பட்டதையடுத்து பொது மக்கள் பலரும் சோனியா நாடு திரும்பியதை அறிந்து கொண்டதாகவும் தெரியவருகின்றது.

அயோத்தி விவகாரம்

## ராவின் அலுவலகத்தில் விசேட தனிப் பிரிவு

(டில்லி)

அயோத்தியா விவகாரம் தொடர்பாக ஆராய்ந்து தகவல்களைச் சேகரிப்பதற்காக இந்தியப்பிரதமர் தமது அலுவலகத்தில் விசேட பிரிவு ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

அயோத்தியா விவகாரம்ஒரு சாதாரண பிரச்சினையல்ல எனக் கூறியுள்ள பிரதமர் நரசிம்மராவ் தான்னால் இதனைத் தீர்த்து வைக்க முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இவ் விவகாரம்தொடர்பாக நிகழ்த்திய உரையில் இது ஒரு பயிற்சி இது தோல்வி அடையாது என்று குறிப்பிட்டது தெரிந்ததே. அயோத்தியா பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அமைக்கப்பட்டுள்ள விசேட குழுவின் செயலாளராகநரேஷ் சந்திரா நியமிக்கப்பட்டுள்ளார் இவர் மத்திய அமைச்சரவை செயலாளராக இருந்து அண்மையில்ஓய்வுபெற்றவர்என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அயோத்தியா விவகாரத்தில் சந்திரசேகர் அரசாங்கம் முன் வைத்த திட்டத்தையே நரசிம்மராவ் முன்னெடுத்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசுப்பத்திரஊழல் விசாரணை

## பொறுப்பிலிருந்து விடுவிக்க மாதவன் வேண்டுகோள்

(டில்லி)

இந்திய அரசின் அரசுப் பத்திரங்களில் இடம் பெற்றதாசக் கூறப்படும் ஊழல் மோசடி பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்டமத்திய புலனாய்வு பிரிவின் இணை இயக்குனர் கே. மாதவன் தம்மை அப் பொறுப்பிலிருந்து விடுவிக்கும் படி மத்திய அரசைக் கோரியுள்ளார்.

பணியிலிருந்து முன் கூட்டியே ஓய்வு பெறுவதற்கு தாமாகவே விடுத்த வேண்டுகோள் மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதால் தமது பணியைப் பொறுப்பேற்க வேறொருவரை நியமிக்கும்படி மத்திய புலனாய்வு பணியகத்தின் இயக்குனரிடம் மாதவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசுப் பத்திரங்கள் ஊழல் விவகாரத்தில் பதிவு செய்யப்பட்ட பத்து வழக்குகளில் ஏழு வழக்குகளை மாதவன் துப்புத் துலக்கி வருவது குறிப்பிடத் தக்கது.

### வீதி விபத்துகள்

(டில்லி)

உத்தரப் பிரதேசத்தில் அசாங்கர் மாவட்டத்தில் நடந்த வீதி விபத்தில் பதின்மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். ஒரு ஜீப்பும் ட்றக்கும் மோதிக்கொண்டதால் இவ் விபத்து நேரிட்டது. இதை விட சிறிநகர்—சிறிகேஷ் வீதியில் பஸ் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்ததால் அதில் பயணம் செய்த இருபத்துமூன்று பேரும் உயிரிழந்துள்ளனர். இச் சம்பவத்தில் காயமுற்றவர்கள் சிறிநகர் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

# ஐ.நா. ஆயுத ஆய்வாளர் குழுவிற்கு அமைச்சுக்களினுள் "அனுமதி இல்லை"

## விசாரணையைத் தவிர்க்க நாக்கைக் கடித்தார்

[பம்பாய்]

1985 ஆம் ஆண்டு எயர் இந்திய ஜம்போ ஜெட் விமானம் ஒன்று தகர்க்கப்பட்டது குறித்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் சீக்கிய தீவிரவாதியொருவர் தான் பேசுவதைத் தவிர்ப்பதற்காக தனது நாவைக் கடித்துக் கொண்டார் என இந்தியப் பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் கைது செய்யப்பட்ட சீக்கிய தீவிரவாதியான மன்ஜித்சிங் கடந்த திங்களன்று நாவைக் கடித்துக் கொண்டதையடுத்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

கடி மிகவும் பலமானது எனவும், இரத்தம் பெருமளவு பெருகியது எனக் கூறும் பொலிஸ் கமிஷனர் சந்தேக நபரின் பேச்சுத் திறனை காயம் பாதிக்குமா என்பது பற்றி எதுவும் கூற மறுத்து விட்டார்.

## சுதந்திரக் கட்சி தலைவி மீது ஹெல உறுமய பாய்ச்சல்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் சக்தி வாய்ந்த 'ஹெல உறுமய' குழு கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை விமர்சித்துள்ளது.

இக் குழு சிறிமாவோவை விமர்சிக்கும் போது; கட்சிக்குள் சதி முயற்சி மேற்கொள்ளப்படுவதாக பொய்யான புகார்களை தெரிவித்தார் என்றும்,

அவர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ள சதிகாரர்களின் பெயர்களை வெளியிடுமாறு ஹெல உறுமய தலைவரும் களுத்துறை மாவட்ட எம்.பி. யுமான திலக் கருணாரத்னா சவால் விடுத்துள்ளார்.

## எல்லைப்புற மக்களைப் பாதுகாக்க வேண்டும்
### - விஜயபால மெண்டிஸ்

(கொழும்பு)

''இனப்பிரச்சினை காரணமாக நாடு இன்று பெருமளவு இரத்தத்தை சிந்திக் கொண்டிருக்கிறது. வடக்கு - கிழக்கு எல்லைப்பகுதிகளில் உள்ள அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். எந்த விலையை கொடுத்தாவது இந்த நிலைமையை நாம் தடுத்து நிறுத்த வேண்டும்.''

இவ்வாறுசிறிலங்கா போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜயபால மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் முன் வைக்கும் யோசனைகளில் உள்ள ஓட்டைகளை கண்டுபிடிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்காமல் இந்தப் பாரிய பிரச்சினைக்கு இறுதியான தீர்வொன்றைக் கொண்டுவருவதற்காக எதிர்க்கட்சிகள் உண்மையாக உழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் நவசமசமாஜகட்சி செய்யாது

(கொழும்பு)

வருங்காலத்தில் நடைபெறவிருக்கும் எந்தத் தேர்தல்களிலும் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்யப்படுவதை எதிர்ப்பதாக நவசமசமாஜக்கட்சி தெரிவித்துள்ளது.

இக்கட்சி இத்தகவலை சிறிலங்கா சுதந்திரக்கட்சியிடமும் இதர கட்சிகளிடமும் கூறியுள்ளது. போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதும், பொதுவான சின்னமொன்றின் கீழ் கூட்டு முன்னணி ஒன்றை அமைப்பதும் இயலாதகாரியம் என்று இக்கட்சியின் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

## மாவீரர் தினத்தையொட்டி

பாராளுமன்றத்திலும் வெளியிலும் இது குறித்து தொடர்ந்தும் பேசப்பட்டு வருகிறது. சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவும் இது குறித்துப் பேசியுள்ளார். கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஐ.தே.க. பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் 'தமிழ் மொழி அமுலாக்கலில் அரசஅதிகாரிகள் கூடுதல் அக்கறை காட்டவேண்டும், எனக்குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இது சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட புறக்கணிப்பினால் எழுந்துள்ள நிலைவரமே ஒழிய திரு. பிரேமதாசா குறிப்பிடுவதுபோல், திணைக்கள அதிகாரிகளின் நடவடிக்கையினால் விளைந்துள்ள ஒன்றல்ல. அவ்வாறு அதிகாரிகளால் எழுந்ததென்றால் சிறிலங்கா அரசாங்கத்தினால் உருவாக்கப்படும் சகல சட்டங்களும் அல்லவா இவ்வாறான தாமதத்திற்கு உள்ளாக வேண்டும். ஆனால் நிலைமை அவ்வாறானதாக இல்லையே.

தமிழருக்கு எதிராக ஆக்கப்படும் சட்டங்கள் அறிவிப்புக்கள் வெளியாகும் முன்னரே அமுலாக்கப்படுகின்றன. தமிழருக்கு எதிரானதென ஆக்கப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டமும், பொருள்கள் மீதான தடை உத்தரவுகளும் அமுலாகிய வேகமே இதற்குப்போதுமான உதாரணங்களாகும். இதே வேளை, தமிழருக்கு சில சலுகைகளை வழங்க நிர்ப்பந்தம் காரணமாக உருவாக்கப்பட்ட சில சட்டங்களைக்கூட சிறிலங்கா அரசாங்கம் மீளப்பெற்றுள்ளது. 13 - வது அரசியல் அமைப்பு திருத்தச்சட்டத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களில் பலவற்றை மத்திய அரசாங்கம் திரும்பப்பெற்றுள்ளமை இதற்கு சான்றுகளாகும்.

இந்நிலையில், சட்டங்கள் அமுல்படுத்த தட்டெழுத்தாளர் இல்லை. மொழிபெயர்ப்பாளர்கள் இல்லை என்பதெல்லாம் அரசாங்கத்தின் புறக்கணிப்பிற்குகூறப்படும் போலியான காரணங்களே ஒழிய அரச அதிகாரிகளின் அக்கறையீனமோ அன்றிப் பொறுப்பின்மையோ அல்ல. அரசாங்கம் தமிழ்மொழி சட்ட அமுலாக்கத்தில் அக்கறையாக இருந்திருப்பின், குறைந்தது 1990-ம் ஆண்டு தமிழ் தட்டெழுத்தாளருக்கு நடத்திய பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு நியமனங்கள்வழங்கியிருக்கலாம். மேலும், தமிழ்மொழி அமுலாக்கல் திணைக்களத்தில் ஒரு தமிழ் பணிப்பாளரையாவது நியமித்திருக்கலாம்.

இதைவிடுத்துசட்டங்களைஇயற்றுவதும், அதை குறித்து பெருமை பேசுவதாலும் பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை. சட்டங்களை அமுலாக்க அரசாங்கம் அதிகாரிகளைப் பணிக்க வேண்டும். தவறும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இதைவிடுத்து அதிகாரிகள் தலையில் பழியைப் போடுவதும், நொண்டிச்சாட்டுச் சொல்வதும் அரசாங்கத்தின் ஏமாற்று வித்தையே ஒழிய வேறொன்றும் இல்லை.

# ஐ.நா. ஆயுத ஆய்வாளர் குழுவிற்கு அமைச்சுக்களினுள் "அனுமதி இல்லை

## - ஈராக் அரசு அறிவிப்பு

(பக்தாத்)

ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுத ஆய்வாளர்களின் புதிய குழுவை எந்தவொரு அமைச்சக கட்டடத்தினுள்ளும் நுழைய அனுமதிக்கப்போவதில்லை என்று ஈராக் அரசு கூறியுள்ளது.

நேற்றுமுன்தினம் தலைநகர் பக்தாத்தில் செய்தியாளர்களிடையே பேசிய ஈராக் அரசின் செய்தித் தொடர்புத்துறை அமைச்சர் அமீர் யூகம்கமாசி மேலும் கூறுகையில் அமைச்சக கட்டடங்களுக்குள் ஐ நா.குழு நுழைவதால், நாட்டின் சுதந்திரம் மற்றும் ஆட்சி உரிமை குறித்த மக்களின் உணர்வுகள் புண்படும் எனத்தெரிவித்தார்.

இதனிடையே ரஷ்யாவைச் சேர்ந்த நிர்கிதாய் ஷெரினோவிச் தலைமையிலான புதிய ஐ.நா.ஆயுத ஆய்வாளர் குழு பஹ்ரெயினில் இருந்து பக்தாத் நோக்கி சென்று கொண்டிருக்கின்றது என அறிவிக்கப்பட்டு உள்ளது.

# மிக் விமானங்கள், டாங்கிகள் ரஷ்யாவிடம் வாங்க பாக். முடிவு

## ஆயுத வர்த்தகத்தில் புதிய உறவு

(இஸ்லாமாபாத்)

ரஷ்யாவிடமிருந்துதனக்குத் தேவையான ஆயுதங்களைப் பெறுவதற்கு பாகிஸ்தான்முயற்சி செய்து வருவதாக தெரியவருகின்றது.

பாகிஸ்தான் இராணுவத்தின் பொதுத் தலைமை அலுவலகம், பாதுகாப்புத்துறை உற்பத்திப் பிரிவு, வெளியுறவு அலுவலகம் என்பனவற்றிற்கிடையே இரண்டு நாட்களுக்கும் மேலாக நீடித்த கருத்துப் பரிமாறல்களின் பின்னர் ஆயுதங்களுக்காக ரஷ்யாவை அணுக பாகிஸ்தான் முடிவு செய்திருப்பதாக 'த நியூஸ்' என்னும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் ரஷ்யாவிலுள்ள தனியார் வியாபார நிறுவனங்கள் சில ஆயுத வியாபாரத்தில் ஈடுபடலாம் எனவும், தனித்தனியாக நான்கு ஆயுத பேரங்கள் அடங்கும் எனவும் தெரிய வருகின்றது.

இவ்வாறு பாகிஸ்தான் கொள்வனவு செய்ய முனைந்துள்ள ஆயுத வகைகளில் 'மிக் 29' 'சுக் கோய்-27' ரக விமானங்கள் மற்றும் 'ரி-72' ரக யுத்த டாங்கிகள், 133 எம். எம் ஆட்லறி பீரங்கிகள் என்பனவும் அடங்கியுள்ளன.

பாகிஸ்தானிலுள்ள ரஷ்யத் தூதுவர் வீ. பீ. யக்கூனின் 'ரி-72' மற்றும் 'எம்-1' ரக யுத்த டாங்கிகளில் முந்நூறை வழங்குவதற்கு பாகிஸ்தான் இராணுவத்தளபதி ஜெனரல் ஜின்ஜீவுக்கு உறுதி அளித்திருப்பதாக தெரியவருகின்றது. எனினும் இவ்வாறான ஆயுத விற்பனைக்கு ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சின் ஆதரவு தெரிவித்துள்ளாரா என்பதை ரஷ்ய தூதுவரகம் தெளிவு படுத்தவில்லை.

இது வர்த்தக ரீதியில் பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் வழங்குவதை அமெரிக்கா தடை செய்திருப்பது தெரிந்ததே. அதாவது அமெரிக்காவிற்கு சவால்விடும் வகையிலேயே பாகிஸ்தான் ரஷ்யாவிடமிருந்து ஆயுதங்களை பெற முனைவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# அணுவாயுத உற்பத்தியில் ஈரான் ஈடுபடவில்லை

## ஐ. நா. வுக்கான ஈரான் தூதுவர்

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அணுகுண்டு தயாரிக்கும் நோக்கம் எதுவும் எமக்கு இல்லை. நாம் நடத்தும் அணுவாயுத தொழில் நுட்ப ஆய்வுகள் யாவும் சமாதான நோக்கத்திற்கானவை என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான ஈரான் தூதுவர் கமல் கராஸி கூறியுள்ளார்.

ஈரான், சிரியா, லிபியா ஆகியநாடுகள் மேற்குலக நாடுகளின் தொழில் நுட்பத்தைப் பயன் படுத்தி, அணுவாயுத உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாகலொஸ் ஏஞ்சல்ஸில்உள்ள மத்திய நிலையம் வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளித்த ஈரான் தூதுவர், மேலும் கூறுகையில்;

மேற்குலகநாடுகளின்தொழில் நுட்பத்தைப்பயன்படுத்திதாம் அணுவாயுதஉற்பத்தி எதிலும் ஈடுபடவில்லை எனவும் குறிப்பிட்டார்.

லும் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்யப்படுவதை எதிர்ப்பதாக நவசமசமாஜக்கட்சி தெரிவித்துள்ளது.

இக்கட்சி இத்தகவலை சிறிலங்கா சுதந்திரக்கட்சியிடமும் இதர கட்சிகளிடமும் கூறியுள் ... கீழ் கூட்டு முன்னணி ஒன்றை அமைப்பதும் இயலாதகாரியம் என்று இக்கட்சியின் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

# மாவீரர் தினத்தையொட்டி பயன் தரு மரநடுகை

கடந்த வருடம் மாவீரர் தினத்தை ஒட்டி கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தமிழீழபொருண்மியமேம்பாட்டுக் கழகத்தினால்நடுகை செய்யப்பட்ட பயன் தரு மரங்கள் தற்போது பராமரிப்புக் கூடுகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இவ் வருடம் மாவீரர் தினத்தினை ஒட்டி பயன் தரு மரங்களை நடுகைசெய்து பராமரிப்பதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது. இதற்காகநாற்றுமேடைகளில் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

தற்போது விறகுத் தேவைக்காகவும், பிறதேவைகளுக்காகவும் மரங்கள்அழிக்கப்பட்டுவருகின்றன. இது சூழல் சமநிலையைப் பெரிதும் பாதிக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மரக்கன்றுகளை நடுகை செய்து பராமரிக்கும் முயற்சியில்ஈடுபட்டு வருகிறது

## விளையாட்டுப் போட்டி

கொக்குவில் மேற்கு கலைமகள் சனசமூக நிலையம் நடத்தும் ராஜன் பாலர் பாடசாலையின் விளையாட்டுப்போட்டி வரும் 10-8-92 திங்கட்கிழமை பிற்பகல் 1-30 மணியளவில் கலைமகள் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

மாவீரர் ராஜனின் பெற்றோர் மேற்படி நிகழ்ச்சியில் மங்கள விளக்கேற்றி வைக்க உள்ளனர். தேசியக்கொடியை நல்லூர் பிரதேச பொறுப்பாளர் திரு. சுதா அவர்கள் ஏற்றிவைக்க உள்ளார். நிலையக்கொடியை ஐ. சாம்பசிவம் அவர்கள் ஏற்றிவைக்க நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் நடைபெற உள்ளது.

## இன்று

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடைபெறும் தெய்வீக இசையரங்கில் இன்றைய நிகழ்ச்சி மங்கள இசையுடன் ஆரம்பமாகும். அதையடுத்து எஸ். எஸ். சிதம்பரநாதன், என். கணேசன் ஆர். கேதீஸ்வரன் ஆகியோர் நாதஸ்வரம் இசைக்க உள்ளனர். எஸ். வீராசாமி, எஸ். முருகதாஸ், ஆர்.எஸ். ரவீந்திரன், ஆர். எஸ். சுதாகரன் ஆகியோர் தவில் கலைஞர்களாக பங்கேற்கின்றனர்.

## யசுர்வேத உபாகருமம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 13-8-92 வியாழக் கிழமையன்றுகாலை 8.00 மணிக்கு பிர்மோபதேசம் பெற்ற அந்தணர்களுக்கான யசுர்வேத உபாகரும கிரியைகள் நடைபெற உள்ளது.

இந்துமத குருமார் ஒன்றியத்தின் சார்பில் யாழ்ப்பாணம் நீராவியடி கடையிற் சுவாமி ஒழுங்கையிலுள்ள சிவானந்த குருகுல கட்டடத்தில் நியாய சிரோன்மணி பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமையில் மேற்படி கிரியைகள் நடைபெறஉள்ளது.

## உப்பு நிறுவன ஊழியர் கூட்டம்

வடபிராந்திய உப்பளங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், அதிகாரிகள், இலிகிதர் உள்ளிட்ட சகல நிரந்தர ஊழியர்களையும் திங்கட்கிழமை 10- 8- 92 முற்பகல் 1-00 மணிக்கு மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஒன்று கூடுமாறு பிராந்திய/ உற்பத்திமுகாமையாளர் தெரிவித்துள்ளார். இதன் போது1991-க்கான லீவு கொடுப்பனவுகளும் வழங்கப்படுமென்றும் அறிவித்துள்ளார்.

ஈழநாதம்

# வாரத்திற்கு ஒரு போராட்டம் நடத்த வேண்டிய நிலையில் தமிழகம்

## ஜெயலலிதா உருவாக்கிய நிலையிது

(சென்னை)

தமிழகத்தில் வாரத்துக்கு ஒரு போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலையைத் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா உருவாக்கி விட்டார் என்று பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் கூறினார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா பொதுமக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இதனால் வாரம் ஒரு போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் போராட்டத்தைத் தேடிச் செல்லவில்லை

பஸ்கட்டணத்தை உயர்த்திய போதும் இலவசமின்சார திட்டத்தை இல்லாமல்செய்த போதும் எதிர்த்துப் போராட்டம் நடத்தினோம். தூக்குக் கயிறுப் போராட்டமும் நடத்தப் பட்டது. சாலை மறியல் போராட்டத்தை அறிவித்த போது அரசு அதை ரத்துச் செய்து விட்டது என்றார் அவர்.

## உரமானியத்தைவிட கம்உதாவ முக்கியமாம்

உரத்துக்கான மானியத்தைத் தொடர்ந்தும் வழங்குவதானால் கம் உதாவ விழாச் செலவுகளை நிறுத்துமாறு உலக வங்கி அரசுக்கு ஆலோசனை கூறியிருந்தது. ஆனால் ஜனாதிபதி பிரேமதாசா உரமானியத்துக்குப் பதிலாக கம் உதாவக் களியாட்டங்களையே விரும்புகின்றார் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத்முதலி குளியாப்பிட்டியில் கருத்தரங்கொன்றில் பேசும் போது குறிப்பிட்டார்.

யாழ். / ஜெய்ப்பூர்
செயற்கைக் கால் தொழிற்சாலை

## பதவி வெற்றிடங்கள்

1. TRAINEE FOREMEN – பயிலுனர் முகாரி

உருக்கு / உலோக/தோல் வேலைகளில் ஓரளவுமுன் அனுபவமுள்ள ஒருவர் தேவை. சேவை மனப்பான்மை உள்ளவர் விரும்பத்தக்கவர்.

கல்வித்தகைமை: G.C.E. (O/L) ஆங்கிலத்திலும் விஞ்ஞானத்திலும் திறமைச்சித்தி.

வயது: 25 — 35 வரை

2. TYPIST CUM CLERK தட்டெழுத்தாளரும் எழுதுவினைஞரும்

ஆங்கிலத்திலும் தமிழிலும் தட்டெழுத்து நன்கு பயின்ற பெண் ஒருவர் தேவை. அங்கவீனர்களுக்கு திறமைக்கேற்ப முன் உரிமை வழங்கப்படும்.

கல்வித்தகைமை: G.C.E. (O/L)ஆங்கிலத்திலும் தமிழிலும் திறமைச்சித்தி.

3. REHABILITATION WORKER (Trainee) புனர்வாழ்வுப் பணியாளர் [பயிலுனர்]

தாதி அனுபவமுள்ள ஒரு பெண் மேற்படி வேலைக்கு எமது தொழிற்சாலையில் பயிற்சி பெற்று கடமையாற்றத் தேவை.

கல்வித்தகைமை: G.C.E. (O/L)

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுந்த சான்றிதழ்களுடனும் சுய விபரங்களுடனும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(இவ் விண்ணப்ப திகதி முடிவு 22-8-92 வரை நீடிக்கப்பட்டுள்ளது)

திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

## வீதி விபத்து

(சாவகச்சேரி)

கச்சாய் வீதிக்கருகாமையில் ஏற்பட்ட சைக்கிள் விபத்தொன்றில் சிற்றுண்டிச் சாலை உரிமையாளர் ஒருவர் லையில் பலமாகக் காயமடைதார். இச்சம்பவம் சென்ற திங்கட்கிழமை இடம் பெற்றது. (10)

## அதிபர்களுக்கான கூட்டம்

க.பொ.த. (உயர்தர) வகுப்புக்கள் இணைப்பது தொடர்பாக (09-08-92) நாளை ஞாயிற்றுக்கிழமை மு ப. 10 மணிக்குநடக்கவிருந்தகூட்டம் (12-08-92) பிற்பகல் 2 மணிக்கு யா/நல்லூர் சாதனாபாடசாலை மண்டபத்தில் நடக்க விருப்பதால் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும், உயர்தர வகுப்பு பாடசாலை அதிபர்களும், பெற்றோர், பிரதிநிதிகளும் தவறாது கலந்து கொள்ளும்படி கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## இலவச வகுப்புகள்

பண்டிவிரிச்சான் பாரதேசத்தில். இடம் பெயர்ந்து வாழும் வறிய மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் முகமாக இலவச வகுப்புகள் நடைபெற்று வருகின்றன மன்னார் மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

ஆசிரியர் திரு. தர்மராசா தலைமையில் நடைபெற்று வரும் இவ்வகுப்புகளில் ஆசிரியர் திரு. டேவிட், ஆசிரியை செல்வி தொடுதோர் அவர்களும் கல்வி கற்பித்து வருகிறார்கள்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 26 — 2 — 1976 |  | 22 — 7 — 1991 |

### வீரவேங்கை மணிவாசன்

(கணேசநாதன் - ஜனார்த்தனன்)

(கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்)

திதி 08 - 08 - 1992

(ஆனையிறவு சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி

## தாய்லாந்து பெண்ணை வெளியேற்ற உத்தரவு

(கொழும்பு)

பம்பலப்பிட்டிப் பகுதிவிடுதி ஒன்றில் இருக்கும் போது கைது செய்யப்பட்ட நான்கு தாய்லாந்து யுவதிகளையும் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்றுமாறு கல்கிசை நீதிவான் ஜயந்த பெரேரா கடந்த புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இந்த நான்கு யுவதிகளில் ஒருவருக்கு எயிட்ஸ் நோய்க்கான வைரசு உடலில் காணப்படுவதாக அவர்களைப் பரிசோதனை செய்த டாக்டர் நீதிமன்றில் சமர்ப்பித்த மருத்துவ அறிக்கையைத் தொடர்ந்தே அவர் இந் நடவடிக்கையை எடுத்துள்ளார்.

தற்சமயம் நுகேகொடை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கும் இந்நால்வரையும் உடனடியாக வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளில் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

## 11 ஆம் திகதி குழு அறிக்கை வெளியிடப்படும்

இபக்கச்சியில் விமானப் படை விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது, வெலிகந்தவில் இடம்பெற்ற சம்பவம், கிரான்குளத்தில் முஸ்லிம்கள் கொலை, சீனன்குடா குண்டு வெடிப்பு போன்ற பல்வேறு விடயங்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய குழு அறிக்கை ஒன்றை வெளியிட அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் இதனைத் தெரிவித்தார்.

# புதிய அரசியல் முன்னணி பத்திரிகை வெளியிட ஏற்பாடு

சிறிலங்காவில் தற்போது புதிதாக உருவாக்கப்பட்டு வரும் அரசியல் முன்னணி ஒன்று ''பெரமுன'' என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை வெளியிடவுள்ளது. இந்த பத்திரிகையினூடாக கட்சியின் கருத்துக்கள் வெளிக்கொண்டு வரப்படவுள்ளன என தகவலறிந்த அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

''ஈகிள் ஐ'' என்ற பெயரில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றை வெளியிட்டு வரும் லலித் அத்துலத் முதலியே இப் பத்திரிகை வெளிவரவும் பின்னணியில் உள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி கை சின்னத்தையும், நீல நிறத்தையும் தன்னுடன்கொண்டுள்ளது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான அரசியல் கூட்டமைப்பொன்றின் போது, இவையிரண்டையும் கைவிட்டு விடுவது பற்றி அனுரா பண்டாரநாயக்கா தயாரான சிறிமாவோ அம்மையாருடன் உடன்பாடு காண முடியாத விடத்தே புதிய அரசியல் முன்னணி உதயமாகும் என அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## கல்வி மேம்பாட்டுக் கழகம்

யாழ். கல்விக் கோட்டத்திலுள்ள மாணவர்கள் நலன் கருதி யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் கல்வி மேம்பாட்டுக் கழகம் ஒன்று ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

இக் கழகம் இன்று மாலை 4.00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்த வகுப்புகளில் ஆண்டு 5 தொடக்கம் ஆண்டு 11 வரையிலான மாணவர்களை கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ் கோட்ட விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

## கரடியனாறு

யான் லோகிதராஜா, வடிவேல் ரமேஸ் குமார், அழகரத்தினம் காசிலிங்கம், வேலப்போடி தங்கப்போடி, வேலப்போடி அழகப்போடி, பாக்கியராஜா யோகநாதன் ஆகியோரே சிறிலங்கா இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டவர்களாவர்.

## சுயவிருப்பத்தில்

ந்து இந்தியா சென்றோம் என தாம் அவ்வப்போது நினைப்பார்கள் எனவும் எந்த மண்ணிலாவது தாம் நிம்மதியாக வாழவேண்டும் இதுதான் தமக்குள்ள பிரச்சினை என முல்லைத்தீவைச் சேர்ந்த பெண் அகதி ஒருவர் கூறியுள்ளார்

மனமுடைந்த நிலையிலே தான் தாங்கள் இலங்கை நோக்கி புறப்பட்டு வந்ததாகவும் கையில் எதுவுமே இல்

## சிப்பாய் பலி

பலாலி இராணுவ முகாம் சிப்பாய் ஒருவர் சக சிப்பாய் ஒருவரின் கைக்குண்டு வீச்சுக்குப் பலியானார் இரு இராணுவச் சிப்பாய்களுக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதமே இவ்வாறு கைக்குண்டு வீச்சில் முடிவடைந்ததாக தெரியவருகிறது.

கைக்குண்டு வீச்சு நடாத்திய இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்கிளையின் விசேட பொதுக்கூட்டமும் பிரிவுகளுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டமும் ஒத்தி வைக்கப்படுவதற்கான

## அறிவித்தல்

எதிர்வரும் 23. 08 92 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த யாழ்கிளை விசேட பொதுக் கூட்டமும், எதிர்வரும் 09. 08. 92 ஆம் திகதி ஒவ்வொரு பிரிவிலும் நடைபெற இருந்த வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய செயற்குழுத் தேர்தல்கள் சம்பந்தமாக பல முறைப்பாடுகள் எமக்கு வந்துள்ளமையாலும், இம் முறைப்பாடுகள் பற்றி விசாரணை செய்து குறைபாடுகள் காணப்படின் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டி இருப்பதனாலும் மறு திகதி அறிவிக்கப்படும் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் சகல அங்கத்தவர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

தலைவர்.
(இடைக்காலம்)

(சி 4839)

## முக்கிய அறிவித்தல்

திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

இல. 5, பழைய பூங்கா வீதி,
சுண்டிகுழி,
யாழ்ப்பாணம்.

(சி/4849)

## Jaffna College Institute of Technology

### *Vaddukoddai*

மரவேலை, கட்டட வேலை

## பயிற்சி நெறிகள்

அகில உலக கெயர் ஸ்தாபனத்தின்
(CARE INTERNATIONAL) உதவியுடன்
இலவச பயிற்சி நெறிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன

காலம் ; 2½ மாதங்கள்

**ஒழுங்கான பயிலுநர்க்கு:**

1. நாளாந்த ஊக்குவிப்புப் படியாக ரூபா 30/- வழங்கப்படும்.
2. ஆரம்பப் பயிற்சியின் பின் 10 மாதங்கள் வேலைத் தளங்களில் தொழில் பயிற்சி.
3. பயிற்சி முடிவில் இலவச உபகரணப் பொதி.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் நேரிலே வந்து யாழ்ப்பாணக்கல்லூரி தொழில் நுட்பநிறுவனம் வட்டுக்கோட்டை காரியாலயத்தில் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 17-8-1992
நேர்முகப் பரீட்சை : 18-8 1992
மு.ப 9 00 மணி

(சி- 4848) பணிப்பாளர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

(ஆனையிறவு சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்தினார்)

விண்ணுக்கும் ஒளி சேர்த்த விளக்கே - ஈழ
வேங்கைகள் படையோடு மண்மீட்க மாண்டு
மண்ணுக்கும் ஒளிசேர்த்த விளக்கே - எங்கள்
மணிவாசா! தமிழீழமண் வாழும்; வாழ்த்தும்!

''கௌரிவாசம்''
*NO* 68 மாவீரர் வீதி,
இணுவில் கிழக்கு.

என்றும் உன் பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்
(2984)

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி

வீரஜனனம்
20 - 06 - 1975



வீரச்சாவு
09 - 07 - 1992

## வீரவேங்கை ஆதவன்

(குகதாஸ் திருமாறன்)

அந்நிய ஆதிக்க கரங்களில் இருந்து
எமது மண்ணின் விடிவினை வேண்டி
புலிகளின் பாசறையில் இணைந்து கொண்டே
இயக்கச்சி சமரில் மாவீரரானாய் - ஆதவனே
தமிழீழ விடிவிற்காய் உழைத்த
வீரர்கள் வரிசையில் நீயும் ஒருவனடா
அதனாலே இன்று பெருமையடைகின்றோம்
நீ கொண்ட இலட்சியம் ஈடேறும்
நாள் வெகு அண்மையில்.

8. 8. 92 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் கிரியையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

புதுவளவு ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.
(2974)

கவும் கையில் எதுவுமே இல்லாத அகதிகள்தான் என்றாலும் தமக்கு சுயமரியாதை என்ற உணர்வு இருக்கிறது என வயோதிபர் ஒருவர் கூறினார்.

தாம் இந்தியாவிலிருந்து திரும்பி அனுப்பப்படும்வரை தம்மை அகதிகளுக்கான ஐ நா உயர்ஸ்தானிகராலய பிரதிநிகள் எவரும் சந்திக்கவில்லை என தமிழ் அகதிகள் அனைவரும் கூறினர்.

### உலக வங்கி

விலைவாசி உயர்வில் இருந்து பாவனையாளர்களைப் பாதுகாக்க; சிலஅத்தியாவசிய பொருள்களுக்காவது கட்டுப்பாட்டு விலையைநிர்ணயியுங்கள் இன்று தாராள பொருளாதாரக் கொள்கை காரணமாக சுட்டுப்பாட்டு விலை என்ற சொல்லே அர்த்தமற்றதாகி விட்டது. என அவர் மேலும் தெரிவித்தார்.

### போட்டிப்

ரியர்களைத் தெரிவு செய்வதற்கான வினாத்தாள்கள் ஆகியவையும் நேற்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளன.

எனவே மேற்குறிப்பிட்ட திகதிகளில் திட்டமிட்டபடி பரீட்சைகள் நடைபெறும் என யாழ். கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. (பா)

### கொழும்பு

நான்கு தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக் கைது நடவடிக்கைகளை அடுத்து வெளிநாடுகளுக்கு செல்லவென கொழும்பில் தங்கியிருக்கும் தமிழ் இளைஞர்களும் உறவினர் வீடுகளில் தங்கியிருக்கும் தமிழ் இளைஞர்களும் பெரும் சிரமத்துக்குள்ளாகி விரக்தி அடைந்த நிலையில் அங்கு இருப்பதாக கொழும்பில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## முக்கிய அறிவித்தல்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைக்கு 03. 08. 1992 ஆம் திகதி முதல் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட்டுள்ளமையால் மேற்படி சங்கத்துடன் ஏதாவது கொடுக்குமதி வருமதியுள்ளவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

(சி 4838)

தலைவர்.
(இடைக்காலம்)

## மரண அறிவித்தல்

## நல்லடக்கம்

### திரு. பத்தலோமை யோசேப்

திரு.பத்தலோமை யோசேப் அவர்களின் நல்லடக்கம் 08-08-1992 இன்று சனி கிழமை காலை 8 00 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் சேமக்காலையில் நடைபெறும்.

ஜீவோதயம்,
மிருசுவில்.

தகவல்
திருமதி யோசேப்

(2983)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**07-08-1992**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5172

**வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:**

26-1602, 27-9825, 42-3815, 27-1027, 41-9556, 26-0923, 27-5077, 24-9490, 27 6821, 27 4465, 26-6393, 26-0506, 25-1023, 28-9697, 24-964, 26-4683, 26-5206, 26-5517, 24-5707, 25-9215, 37-3969, 25-8250,

**வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:**

41-7109. 24-4491, 26-7003, 26-5113. 26-3321, 28-2829, 26-4885, 28-2654, 26-8052, 24-5927, 24-9938, 26-6398, 24-6475, 26-5563, 41-6784, 26-1349